# பிரசங்க மேடைக்கான ஒரு சிலுவை [மத்தேயு 27:46; லூக்கா 23:34-46; யோவான் 19:25-30]

கிறிஸ்து பிறந்து முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு,[1] கொல்கொதா என்னும் ஆலயத்தில், சிலுவை என்ற பிரசங்க மேடையில், பஸ்காவுக்கு முந்தின வெள்ளிக்கிழமையன்று வரலாற்றிலேயே மாபெரிய பிரிவு உபசாரப் பிரசங்கம் நடை பெற்றது.

பரிசுத்த வேத எழுத்துக்களில் ஆயிரக்கணக்கான வருடங் களும், நூற்றுக்கணக்கான ஆண் மற்றும் பெண்களைப் பற்றிய ஜீவனுள்ள வார்த்தைகள் அடங்கியிருந்தாலும், ஒரு சிலருடைய மரண வாக்குமூலங்களே முழுமையாகத் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று இஸ்ரவேலினுடையது, இன் னொன்று மோசேயினுடையது, மூன்றாவது ஸ்தேவானு டையது.[2] இஸ்ரவேல்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது தேசம் ஆகும்; மோசே சட்ட ரீதியான முதலாவது காலத்தவர் ஆவார்; ஸ்தேவான், கிறிஸ்தவத்திற்காக முதலாவது மரித்தவர் ஆவார். இருப்பினும், கல்வாரியின் காற்றிலிருந்து கிரகிக்கப் பட்ட "ஏழு நுட்பமான இரட்சிப்பின் வசனங்கள்" சுவிசேஷ கர்களால் எழுதப்பட்டுள்ளதுபோல இதுவரை எந்த செவியும் எதையும் இதுவரை கேட்டதில்லை.

தமது நேரடியான ஊழியத்தின்போது இயேசு அநேக பிரசங்க மேடைகளைப் பயன்படுத்தினார் - மலை உச்சி, கூரையின் உச்சி, படகு, கிணறு போன்றவை - ஆனால் இவை

எதுவும் சிலுவைக்கு ஒப்பானவை அல்ல. மரிக்கின்ற கர்த்தரைப் போன்ற மனவலிமையுள்ள பிரசங்கியார் ஒருவர் என்றும் இருந்ததில்லை - கபாலஸ்தலத்தில் கூடியிருந்ததுபோன்ற ஒரு ஜனக்கூட்டம் என்றும் எந்த சபையிலும் இருந்ததில்லை - இயேசுவின் அந்த ஏழு வார்த்தைகளைப்போன்ற பிரசங்கம் என்றைக்கும் எவராலும் நிகழ்த்தப்பட்டதில்லை.

## மன்னிப்பின் வார்த்தைகள்
## "இவர்களுக்கு மன்னியும்" (லூக். 23:34)

சிலுவையின் ஊர்வலம் கல்வாரியை அடைந்தபோது, இயேசுவின் வஸ்திரங்கள் உரியப்பட்டன; ஐந்து நாட்களுக்கு முன்புதான், எருசலேமில் இருந்தவர்கள், இயேசு வரும் வழியில் விரிக்கத் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றினார்கள்; இப் பொழுதோ அவர்கள் அவரது வஸ்திரத்தை உரித்தார்கள். தமக்குத் தண்டனையை நிறைவேற்றுவோரிடம் இயேசு தமது கரங்களை விரித்துக் கொடுத்தார் - அந்தக் கரங்கள் யாருக்கும் தீமை எதுவும் செய்ததில்லை, உலகத்திற்கு ஆசிர்வாதங்கள் அளித்த உன்னத கரங்கள் அவை. அடிக்கும் சத்தமானது அடியிலிருந்த நகர மதில்களில் எதிரொலித்தது. அதன் பிறகு சிலுவையானது மெதுவாக உயர்த்தப்பட்டு, வானத்தையே குலுக்கும் திடும் என்ற ஒரு ஒலியுடன் குழியில் நிறுத்தப் பட்டது. இயேசு தமது கடைசிப் பிரசங்க மேடையில் உயர்த்தப்பட்டார்.

சிலுவையில் இயேசு கூறிய முதல் வசனம் மன்னிப்பின் வசனம் ஆகும்: "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக். 23:34அ). இந்த முதலாவது, நான்காவது மற்றும் ஏழாவது வசனங்கள் ஜெப வார்த்தைகள் ஆகும். துவக்கமும், நடுவும், நிறைவுமான மூன்று இடங்களில் இயேசுவின் துக்கம் தேவனு டைய ஐக்கியத்தில் தோய்க்கப்பட்டது.

சிலுவையில் மனிதர்கள் ஜெபிப்பது அரிது. மரணத்தை எவ்வளவு வலிமிக்கதாய் மாற்ற முடியும் என்று சிந்தித்த வக்கிர மனங்களின் கண்டுபிடிப்பே சிலுவையாகும். அப்படிப்பட்ட பயங்கரமான தண்டனையைப் பெறும் குற்றவாளிகள்

வழக்கமாக வலியினால் துடித்து மயங்கி, அலறி, கெஞ்சி, சபித்து, தன்னைப் பார்ப்பவர்கள் மேல் துப்புவார்கள். ஆனால் இயேசு ஜெபித்தார்.

இயேசு தமது வலியை முதலில் எண்ணாமல், தம்மை உபத்திரவப்படுத்தினவர்கள் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொண்ட தீமையை எண்ணிப்பார்க்கிறார். சந்தன மரமானது தன்னை வெட்டும் கோடரியைக்கூட நறுமணத்தால் தோய்ப்பது போல, இயேசுவும்கூட அங்கு, "பிதாவே நீர் உமது இரக்கங்களை என்னைவிட்டு மறைத்தாலும், இவர்களுக்கு மறையாதேயும்" என்றார்.

தமது நேரடியான ஊழியத்தில் இயேசு மன்னிப்பு என்ற பொருள்பற்றி அடிக்கடி போதித்துள்ளார்:

> "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் ... மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத். 6:12, 14-15).
>
> அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: "ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்துவந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரமட்டுமோ" என்று கேட்டான். அதற்கு இயேசு: "ஏழுதர மாத்திரம் அல்ல; ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்கு சொல்லுகிறேன் ... நீங்களும் அவனனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்'' என்றார் (மத். 18:21-22, 35).

இருப்பினும் மன்னித்தல்பற்றிய இயேசுவின் மாபெரும் போதனை சிலுவையில்தான் நிகழ்ந்தது. ஏனெனில் அதில் அவர் தாம் போதித்ததை செயல்முறையில் விளக்கப் படுத்தினார்.

லூக்கா 23:34ன் வினைச் சொல்லானது கிரேக்க மொழியில் முற்றுப் பெறாத வினைச் சொல்லாக அமைந்துள்ளது. தமிழில் "... என்றார்" என்றுள்ளது. ஆனால் அது "... என்று சொல்லிக் கொண்டிருந்தார்" என்று இருக்க வேண்டும். அதாவது அந்த வார்த்தைகளை இயேசு மறுபடி மறுபடி அநேக முறை சொல்லிக்கொண்டிருந்தார் என்று ஆகிறது.

காட்சி இப்படியாக நடந்திருக்கவேண்டும்: கபாலஸ் தலத்திற்கு வந்து சேர்ந்தவுடன், இயேசு சுற்றிலும் பார்த்து, ‘‘பிதாவே இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்’’ என்று ஜெபித்தார். ஒரு நூற்றுக்கு அதிபதி வந்து அவரைத் தரையிலே தள்ளியதும், ‘‘பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே’’ என்று ஜெபித்தார். மழுங்கிய ஆணி அவரது துடிக்கும் உள்ளங்கைகளில் கிழித்து நுழைந்தபோது “பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே’’ என்று ஜெபித்தார். சிலுவையானது நேராக நிமிர்த்தப்படுகையில், ‘‘பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே’’ என்று ஜெபித்தார். கூட்டம் தம்மை சபித்துத் திட்டும் போது, “பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே’’ என்று ஜெபித்தார். தையலில்லாத அவருடைய மேலங்கிக்காகப் படைவீரர்கள் சீட்டுப் போட்ட போது, “பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே” என்று ஜெபித்தார்.

முழுவிபரமும் நமக்குத் தெரியவில்லையென்றாலும், இயேசு தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருந்தார் என்று மட்டும் நாம் அறிகிறோம். “பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே’’ என்று ஜெபித்துக்கொண்டிருந்தார்.

பாவமன்னிப்பானது பெந்தெகொஸ்தே நாள் வரைக்கும் பரமபிதாவினிடத்தினின்று பொழியப்படவில்லை என்பதையும் (அப். 2:38) அதுவும்கூட மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு மட்டுமே கிடைத்தது என்பதையும் நாம் இங்கு கவனிக்க வேண்டியது அவசியமாகும். அதே சமயம், இயேசு தாம் மரிக்கின்றபொழுது தமது இருதயத்தில் எவ்வித பகைமை உணர்வும் கொண்டிருக்கவில்லை என்பதையும் நாம் வலியுறுத்துகின்றோம். நீங்களும், நானும் இயேசுவைப்போல் இருக்கக் கற்றுக் கொள்வது அவசியம்; நாம் நமது எதிரிகளிடம் அன்பு காட்டவும், நம்மை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் செய்யவும் கற்றுக்கொள்வது அவசியமாகும் (மத். 5:44).

# நம்பிக்கையின் வார்த்தைகள்
# "என்னோடிருப்பாய்" (லூக்கா 23:39-43)

சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளின் நிலை ஒரு முடிவில்லாததாகக் காணப்பட்டிருக்கும். கேலி செய்யும் கூட்டமானது வெறியுடன் சிலுவையைச் சுற்றிலுமிருந்து தங்களது வேலையைச் செய்து கொண்டிருந்தது. அவர்கள்: "மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை. நாம் கண்டு விசுவாசிக்கத்தக்கதாக இஸ்ரவேலுக்கு ராஜாவாகிய கிறிஸ்து இப்பொழுது சிலுவை யிலிருந்திறங்கட்டும்" என்று ஆர்ப்பரித்தார்கள் (மாற்கு 15:31ஆ-32அ). மேலும் மாற்கு, "அவரோடேகூடச் சிலுவை களில் அறையப்பட்டவர்களும் அவரை நிந்தித்தார்கள்" (மாற்கு 15:32ஆ) என்று எழுதியுள்ளார்.

சிலுவையில் அறையப்பட்ட கள்ளர்களில் ஒருவன் படிப் படியாக இயேசுவை வித்தியாசப்பட்ட நோக்கில் காணத் தொடங்கினான். இயேசுவைப்பற்றிய ஏதோ ஒன்று அத் திருடனின் இதயத்தைத் தொட்டது. ஒருவேளை, மரிக்கும் வேளையில் இயேசுவின் முகத்திலிருந்த பெருமிதம் அவனைத் தொட்டிருக்கலாம். ஒருவேளை அவர் மறுபடி மறுபடி "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" என்று சொல்லிக் கொண்டிருந்தது அவன் இருதயத்தைத் தொட்டிருக்கலாம். எதுவாயிருப்பினும், அத்திருடனின் இருதயத்தில் திடமான விசுவாசம் வளர்ந்து உறுதியானது.

> அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளி களில் ஒருவன்: "நீ கிறிஸ்துவானால். உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்" என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: "நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனா யிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவை களுக்குத் தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன் றையும் நடப்பிக்கவில்லையே" என்று அவனைக் கடிந்து கொண்டு, இயேசுவை நோக்கி: "ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்றான். இயேசு அவனை நோக்கி: "இன்றைக்கு நீ என்னு டனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார் (லூக்கா 23:39-43).

*சிலுவையிலும்கூட, இயேசுவின்மீதான தாக்குதலை சாத்தான் குறைக்கவில்லை. வனாந்தரத்திலே சாத்தான், இயேசுவிடம், அவர் சிலுவையில் அறையப்படாமலேயே உலகத்தின் இராஜ்யங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று சொன்னான்[3] (மத்தேயு 4:8-9). இயேசுவின் நேரடியான ஊழியத்தின் முடிவு நேரத்தில், பேதுரு இயேசுவிடம் சிலுவையை மறந்துவிடும்படி கூறச் சாத்தான் தூண்டினான் (மத்தேயு 16:21-23). இப்பொழுது சிலுவையில் இயேசு மரிக்கின்ற வேளையில், சாத்தான் ஒரு கள்ளன் மூலமாகப் பேசி, இயேசுவைச் சிலுவையிலிருந்து இறங்கி, அதன்மூலமாய் மரணத்திற்குத் தப்பித்துக்கொள்ளும்படிக்கு சவால் விடுகிறான்.*

*தமது ஜீவியகால முழுவதும் இயேசு, தம்மைக் காத்துக் கொள்ளும்படி செயல்படுதல் அல்லது தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தல் என்ற இரு விஷயங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் நிலையிலிருந்தார். அவரது சிலுவையில்கூட மறுபடியும் அந்த வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.*

*விசுவாசமில்லாத கள்ளன், அவர் தம்மையே காத்துக் கொள்ளும் செயல்பாட்டைத் தேர்ந்தெடுக்க அவரிடம் பேசினான்: "நீ கிறிஸ்துவானால் உன்னையும், எங்களையும் இரட்சித்துக் கொள்" (லூக்கா 23:39). சாத்தான் வனாந்தரத்தில் ''நீ தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்'' (மத். 4:3) என்று சொன்ன அதே அணுகுமுறையை இந்தக் கள்ளனும் கையாண்டான். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், "விசேஷித்த பலன்கள்[4] இல்லையென்றால், கிறிஸ்துவாயிருப்பதில் பயனில்லை. அப் பலன்களை அனுபவித்து, அதே வேளையில் நீர் யாரென்றும் நிரூபியும்" என்று அவன் கூறினான். A.T. ராபர்ட்சன் என்பவரின் கூற்றுப்படி, இந்தத் திருடன், "சிறையை உடைக்கும் முயற்சி செய்யும் அளவிலேயே'' பேசினான். இயேசு அந்தச் சிறையுடைப்பைத் தலைமையேற்று நடத்த வேண்டும் என்றும் அவன் ஆலோசனை கொடுத்தான்.*

*விசுவாசத்திற்குள் வந்த கள்ளனோ, இயேசு தம்மையே பலியாக்கும் அந்தச் செயலையே விரும்பினான்: "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத் தருளும்'' (லூக்கா 23:42). வேறு வார்த்தைகளில் இதைச்*

சொல்லுவதானால், அவன் இயேசுவிடம், "நீர் சிலுவையிலே மரித்து உமது இராஜ்யத்தை ஜெயங்கொள்ளும்'' என்று உற்சாகப்படுத்தினான். இந்த மனிதனின் விசுவாசம்தான் எவ்வளவாயிருந்தது! தண்டனை பெற்ற குற்றவாளியாக இயேசுவை அவன் பார்க்கவில்லை; மாறாக ஒரு இராஜாவாகப் பார்த்தான்! முள்முடிக்குப் பதிலாக மேன்மையான மகுடத்தை அவன் கண்டான். இயேசுவின் கைகளிலிருந்த ஆணிகளுக்குப் பதிலாக செங்கோலை அவன் கண்டான்! இயேசுவின் சரீரத்தி லிருந்து வெளியேறி அவர் மேல் உறைந்துகிடந்த அவரது இரத்தம் அவனுக்கு ராஜரீகமான இரத்தாம்பரமாய்த் தோன்றியது.

இந்த வசனங்களிலும், மறுபடி முழுமைபெறாத வினைச் சொற்களே பயன்படுத்தப் பட்டுள்ளன. இரண்டு கள்வர்களு இயேசுவின் செவிகளில் இரண்டு விதமான கருத்துக்களை-தம்மைக் காத்துக்கொள்வது அல்லது தம்மையே பலியாக அளிப்பது-சிலுவையைவிட்டு இறங்குவது அல்லது சிலுவை யிலேயே மரிப்பது-என்ற இரு கருத்துக்களை மோத விட்டனர்.

விசுவாசித்த அந்தக் கள்ளனுக்கு இயேசு அளித்த பதில் ஒரு நம்பிக்கையின் செய்தியாக இருந்தது: ''இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (வ. 43).

ஆனால், "அந்தக் கள்ளன் இரட்சிக்கப்பட்டது போல இன்று இரட்சிக்கப்பட முடியும்" என்பது இங்கு சொல்லப் படவில்லை (அதிலும் விசேஷமாய், ஞானஸ்நானம் இல்லாமல் இரட்சிப்பு உண்டு என்று இங்கு கூறப்படவில்லை)[5] என்பதைக் கவனிக்க வேண்டும். அந்த கள்ளன் இயேசுவின் மரணத்திற்கு முன்பு இரட்சிக்கப்பட்டான்;[6] இப்படியாக அவன் பழைய பிரமாணத்தின்கீழாக இரட்சிக்கப்பட்டவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறானே யன்றி, நாம் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறவேண்டிய புதிய பிரமாணத்தின்படியாக (கொலோ. 2:14; எபி. 9:16-17)[7] அவன் இரட்சிப்படையவில்லை (மாற்கு 16:16).

மேலும் இது, "கடைசி நிமிட இரட்சிப்பு" என்ற நம்பிக் கையைத் தரும் செய்தியல்ல. நாம் அறிந்தமட்டில், இதுவே இயேசுவைப்பற்றி அறிய அக்கள்ளன் பெற்ற முதல் வாய்ப்பு

ஆகும். மறுபடி மறுபடி சுவிசேஷத்தை ஏற்க மறுத்து கடைசி நிமிடத்திற்காக ஒத்திப்போடுபவர்களுக்கு இவன் ஒரு முன் மாதிரியல்ல. "பதினோராம் மணி வேளையில்"[8] இரட்சிப்புப் பெற நம்பிக்கையாயிருப்பவர்களில் அநேகர் 10:30 மணிக்கு மரித்துவிடுகின்றார்கள் என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.

வேறு எவ்வழியில் இயேசுவின் இவ்வார்த்தைகள் நம்பிக்கையின் செய்தியாய் உள்ளன? முதல் கள்ளனின் ஆலோசனையை அவர் மறுத்து, இந்த இரண்டாம் கள்ளனின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டதால் இது நம்பிக்கையின் செய்தியாயிருக்கிறது. ''மெய்யாகவே''[9] என்ற வார்த்தை "ஆமென்" என்ற வார்த்தைக்குரிய கிரேக்கப் பதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இயேசு கூறியது, "ஆமென்! அப்படியே ஆகட்டும். எல்லா மனிதரும் பரதீசுக்குச் செல்லும் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக நான் மரிப்பேன்! தேவனுடைய திட்டத்தை இப்படி நான் முழுமையாக நிறைவேற்றுவேன்'' என்று ஆகும். அப்போது பரலோக முழுவதும் நிம்மதி பெருமூச்சு விட்டிருக்கவேண்டும்.

இரண்டாவதாக, எல்லா மனிதரும், அவர்கள் வாழ்க்கை எவ்வளவுதான் நம்பிக்கையற்றதாகக் காணப்படினும் இரட்சிக்கப்படமுடியும் என்பதால் இது நம்பிக்கையின் செய்தியாக இருக்கிறது. "ஒரே முறை கேட்டு, ஒரே முறை தேடி, ஒரே முறை தட்டி, வாழ்வின் கடைசி நாளில் இந்தத் திருடன் இரட்சிக்கப்பட்டான்" என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். இந்தத் திருடன் இவ்விதமாய் இரட்சிக்கப்படக்கூடுமானால், நீங்களும்கூட, என்ன செய்திருந்தாலும் இரட்சிக்கப்பட முடியும். சிலுவையில் அறையப்படத் தான் தகுதியானவனே (லூக். 23:41)[10] என்று ஒத்துக்கொண்ட இந்தக் குற்றவாளியின் வாழ்க்கையைக் காட்டிலும் உங்கள் வாழ்க்கை மோசமாயிருக்காது என்பது உறுதி.

தாம் நேசித்தும், இன்னும் தம்மிடம் திரும்பாதவர்களுக்கு கர்த்தரின் நம்பிக்கை காத்திருக்கின்றது. எனவே இதை விட்டு விடாதீர்கள். திருடனுக்கு இந்நம்பிக்கை இருக்குமேயானால், இன்றுள்ள அப்படிப்பட்டவர்களுக்கும்கூட அந்த நம்பிக்கை நிச்சயம் உண்டு! கிறிஸ்துவால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை!

## தனிமைக்கான வார்த்தைகள்
## “அதோ உன் மகன்” (யோவான் 19:25-27)

கல்வாரிக் காட்சியை நாம் காணுகையில், அங்கிருந்த எல்லோருமே இயேசுவை நிந்திக்கவில்லை என்பதற்காக நாம் நன்றி செலுத்துகிறோம். அங்கிருந்த ஒரு சிலர் அவருக்காகக் கவலைப்பட்டனர். யோவான், “இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள்” (யோவான் 19:25) என்று குறிப்பிட்டார். வசனம் 26ல் அப்போஸ்தலனாகிய யோவானும் அங்கிருந்ததாகக் கூறப்படுகிறது. இயேசு தமது அடுத்த வார்த்தைகளை தமது தாய்க்கும், யோவானுக்கும் கூறுகிறார்:

> அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: “ஸ்திரீயே, அதோ உன் மகன்” என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: “அதோ, உன் தாய்” என்றார். அந்நேர முதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான் (யோவான் 19:26-27).

இச்சம்பவத்திலிருந்து அநேக பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும். முதலாவது இயேசு தமது தாயைப்பற்றி அக்கறை எடுத்துக்கொண்டார். ‘‘ஒருவன் தன் சொந்த ஜனங்களையும். விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும் அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்” (1 தீமோ. 5:8). இயேசுவின் சகோதரர்கள் அந்நேரத்தில் அவிசுவாசிகளாயிருந்ததால்,”[11] அவர் தமது தாயை அவர்களின் பாரமரிப்பில் விடவிரும்பவில்லை. எனவே அவளைப் பாதுகாக்கும் பொறுப்பை அவர் யோவானிடம் ஒப்படைத்தார்.[12]

மேலும் இயேசு தமது தாயை நேசித்த போதிலும், அவளை வணங்கவில்லை. அவளை அவர் ‘‘பரலோகத்தின் அரசி’’ என்றோ “தேவ தாய்” என்றோ அழைக்கவில்லை. மாறாக அவர் அவளை “ஸ்திரீயே” என்று அழைத்தார். கிரேக்க மொழியில் இது ஒரு அவமரியாதையான வார்த்தையல்ல[13] ஆனால் ஒரு பாசமுள்ள வார்த்தையாகும். மரியாளுக்குப் பயன் படுத்தப்பட்ட இவ்வார்த்தை தெய்வீகமானவைகளுக்கு அடுத்ததல்ல.

இவ்விதமாக, இயேசுவின் சொந்த வார்த்தைகள் மரியாள் வணக்கத்திற்குப் புறம்பானவைகளாகும்.

இயேசுவின் இவ்வார்த்தைகளுக்கான அர்த்தத்தை இன்னும் சற்று ஆழமாகக் கவனிப்போம். கல்வாரியின் மையக் காட்சி மரியாள் அல்லது யோவானைப்பற்றியதல்ல; மாறாக அது இயேசுவைப்பற்றியதாகும். இக்காட்சியை இயேசுவைக் கண்ணோக்கமாய்க்கொண்டு மறுபடி பார்ப்போம். அவர் தம்மைப்பற்றியல்ல, மரியாளைப்பற்றிக் கவலையாயிருந்தார். "உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்" (லூக். 2:35) என்று சிமியோன், மரியாளிடம் கூறியிருந்தார். இந்தப் பட்டயம் மரியாள் தனது மகனைச் சிலுவையில் கண்டபோது தான் ஆழமாய் அவள் ஆத்துமாவை ஊடுருவிற்று. இயேசு இக்காட்சியிலிருந்து மரியாள் தப்பிக்கும்படி விரும்பினார். "அந்நேர முதல்[14] அந்த சீஷன் அவளைத் தன் வீட்டில் ஏற்றுக் கொண்டான்'' என்பதற்குச் சிலர், மரியாள் அப்பொழுது மயக்கமுற்றதாகவும், யோவான் அவளைத் தன் வீட்டிக்குச் சுமந்து சென்றதாகவும் பொருள் கொள்கின்றனர்.

இயேசுவின் வார்த்தைகள் மரியாளுக்கு உதவிசெய்தன,[15] ஆனால் அவர்கள் அவரை எங்கு விட்டுச் சென்றனர்? தாயின் அன்பான அரவணைப்பின்றி அவரை அவர்கள் விட்டுச் சென்றனர். இயேசுவின் வார்த்தைகள் தனிமைக்குரியவைகளாயிருந்தன. மரியாள் அவரை விட்டுச் சென்ற சற்று நேரத்தில், இயேசுவின் பரலோக பிதாவாகிய தேவனும் அவரைக் கைவிட்ட சூழ்நிலை நிலவிற்று. பாவத்தின் வல்லமையைத் தோற்கச்செய்ய செய்த போராட்டத்தில் இயேசு தனிமைப் படுத்தப்பட்ட காட்சியைத்தான் அங்கு காண்கிறோம்.

தேவ பிரசன்னம் இல்லாமலிருக்கும் நிலையை என்னால் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், மனித அன்பின்றி இருக்கும் சூழ்நிலையை புரிந்துகொள்ள முடிகிறது. தனிமையாயிருப்பது என்ன என்பதை நானும் நீங்களும் அறிவோம். இயேசு தனிமையில் வெற்றி கண்டதுபோல, நாமும் தனிமையில் வெற்றிகாண அவர் நமக்கு உதவி செய்ய முடியும்.

## பாடுகளின் வார்த்தைகள்

## "ஏன் என்னைக் கைவிட்டீர்?" (மத். 27:46)

*காட்சி பின்வருமாறு அமைந்தது: கொல்கொதாவில் திகைப்பூட்டும் வகையில் திடீரென இருள் மூடிற்று, அது இயேசுவை, அவரது உருவத்தை எல்லாக் கண்களுக்கும் மறைத்தது. கூட்டத்தாரின் உதடுகளிலிருந்து கேலிச் சொற்கள் அகன்று போயின. பயமும், திகிலும் ஒவ்வொரு இதயத்தையும் ஆட்டிப் படைத்தன. சிலுவையில் அறையுண்டவர்களின் பெருமூச்சுகள் புலம்பல்கள் மட்டுமே அவ்வப்போது அந்த ஆழமான அமைதியைக் கிழித்துக்கொண்டு இருந்தன. இருளிலிருந்து திடீரென்று அவ்வார்த்தைகள் அமைதியை உடைத்துக்கொண்டு கிளம்பின: "ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்த மிட்டுக் கூப்பிட்டார்" (மத்தேயு 27:46அ). இயேசு தமது குழந்தைப் பருவம் முதலே பயன்படுத்திய இவ்வார்த்தைகள் சங்கீதம் 22ல்[16] உள்ளன. மத்தேயு இவ்வார்த்தைகளை, "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று பொருள் தருவதாக விளக்கப்படுத்துகிறார்.*

*எந்த ஒரு மொழியிலும், ''கைவிடப்படுதல்'' என்ற இவ் வார்த்தை மிகுந்த வருத்தத்திற்கு உரிதாய் உள்ளது. கிரேக்க மொழியில் இவ்வார்த்தை, ''விட்டுவிடுதல்,'' ''கைவிடுதல்'' மற்றும் ''கீழே விடுதல்'' என்ற வார்த்தைகளின் கூட்டுச் சொல்லாக உள்ளது. இது தோல்வியுற்று, உதவியற்று இருக்கும் நிலையைக் குறிக்கிறது.*

*இயேசு மனிதரால் மட்டுமல்ல, தேவனாலும் கைவிடப் பட்டார். இது மனிதரின் புரிந்துகொள்ளுதலுக்கும் அப்பால், மீட்பின் அற்புதங்களிடம் நம்மை அழைத்துச் செல்லுகிறது. ஏசாயா 59:1-2ல் பாவம் நம்மை தேவனைவிட்டுப் பிரிக்கிற தென்று காண்கிறோம். 2 கொரிந்தியர் 5:21ல் "பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" என்று படிக்கின்றோம். இயேசு "நமக்காகப் பாவமானபோது"[17] நமது பாவங்களுக் கான தண்டனையை அவர் பெற்றுக்கொண்டார். பாவத்தின் இறுதியான தண்டனை, தேவனால் கைவிடப்படும் ஒரு நிலையேயாகும் (2 தெசலோ. 1:9).*

*நம்மை இரட்சிக்க இயேசு எவ்வளவாய் சித்தங் கொண்டிருந்தார்? மத்தேயு 27:46 இத்தூரத்தை நமக்குச் சித்தரிக்கின்றது. இயேசு பரலோகத்தின் மாட்சிமையை விட்டு இறங்கினார். ஆனால் இன்னும் அதிக தூரம் அவர் சென்றார். அவர் இப்பூமியில் ஒரு மனிதனாக, அடிமையாகப் பிறந்தார், ஆனால் இன்னும் அதிக தூரம் சென்றார். வெட்கம் மற்றும் புறக்கணிக்கப்படுதல் ஆகியவற்றால் அவர் பாடுபட்டார், ஆனால் இன்னும் அதிகம் தூரம் அவர் சென்றார். அவர் சிலுவைவரை சென்றார், ஆனால் பயணம் இன்னும் முடியவில்லை. நம்மை மீட்பதற்காக, அவர் தேவனால் கைவிடப்படும் நிலை வரைக்கும் செல்ல சித்தமானார்!*

*இதை என்னால் என்றுமே புரிந்துகொள்ள முடிவதில்லை. இயேசு இதை எப்படி நமக்காகச் செய்யக்கூடும்? இவ்வளவாய் அவர் உங்களையும் என்னையும் நேசிக்க முடிந்தது எப்படி? சிலுவையில் அவர் எல்லாப் பாவிகளின் பாவங்களுக்கான நித்திய தண்டனையை ஒரு குறிப்பிட்ட காலவரையறையில் அவர் பெறமுடிந்தது எவ்விதம்? இதையெல்லாம் நான் புரிந்துகொள்ள முடியவில்லையென்றாலும், இதை விசுவாசத்தால் நான் ஏற்றுக்கொள்ள முடியும். "தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக" அவருக்கு நான் நன்றி செலுத்துகிறேன் (2 கொரிந்தியர் 9:15).*

## சோர்வின் வார்த்தைகள்
## "தாகமாயிருக்கிறேன்" (யோவான் 19:28)

*பூமியின்மேல் மூன்றுமணி நேரம் இருள் மூடிற்று. சிலுவையைச் சுற்றிலும் இருந்தவர்கள் இனி வெளிச்சமே வராதோ என்று எண்ணியிருக்கவேண்டும். நிறைவாக, இந்தச் சோதனை முற்றுப்பெற்றது. இருளைக் கிழித்துக்கொண்டு பகலவன் கிளம்பினான். இருளின் இளவரசன், நீதியின் குமாரனை அழித்துவிடப் பெறுமுயற்சி செய்தும், தோல்வியுற்றான். இப்போது முதன்முறையாக இயேசு தன்மைப் பெயர்ச் சொல்லைப் பயன்படுத்துகின்றார்: அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத் தக்கதாக: "தாகமாயிருக்கிறேன்" என்றார் (யோவான் 19:28).*

இவ்வார்த்தைகள் எவ்வளவாய் உணர்வுகளைக் கட்டுப் படுத்தி வெளியாகின! நானாக இருந்திருந்தால், வலியின் துடிப்பினால், நம்பமுடியாத இருதய பாரத்தினால் நீளமாக எதையேனும் பேசியிருப்பேன். இயேசு கிரேக்க மொழியில் ஒரே ஒரு வார்த்தைதான் பேசினார்: “தாகமாயிருக்கிறேன்.” அது ஒரு புகாரோ அல்லது வேண்டுகோளோ அல்ல - மாறாக உண்மையைக் கூறும் ஒரு சிறிய விளக்கச் சொல்-அவ்வளவே!

இயேசு மாம்சத்திலும், இரத்தத்திலும் இருந்தார் என்பது இவ்வார்த்தையிலிருந்து நாம் கற்கும் தெளிவான பாடமாகும். நம்மைப் போலவே அவருக்கும் பசி, தாகம் முதலியன உண்டாயிருந்தது.[18] எனவே நம்மைக் குறித்து அவர் பரிதபிக்க முடியும்.

> *நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், ... ஆதலால், நாம் இரக்கத் தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக் கடவோம் (எபிரெயர் 4:15-16).*

இருப்பினும், இவ்வசனம் கூறப்பட்ட வேளையானது நமக்கு இதைக்காட்டிலும் முக்கியமான பாடத்தை உணர்த்துகிறது. “எல்லாம் முடிந்தது” என்று இயேசு அறிந்து, அதன் பிறகே இவ்வார்த்தைகளைக் கூறினார். (யோவான் 19:28). சிலுவையில் அவர் நரக வேதனையை அடைந்து தீர்ந்த பின்பே இவ்விதம் கூறினார்.[19] பாவத்தோடு போர் செய்து முடித்தபின்பு இயேசு தம்மைக்குறித்து எண்ணிப்பார்த்துக் கூறிய மிதமான வார்த்தைகள் ஆகும். ஜெயம் பெற்றவன் கொண்ட பலவீனம்போல, நீண்ட தூரம் ஓடி வந்தவன் எல்லைக் கோட்டைத் தொட்டு, பிறகு “தாகமாயிருக்கிறேன்” என்று சொல்வதுபோல இயேசு இங்கு கூறினார்.

## வெற்றியின் வார்த்தைகள்<br>“முடிந்தது” (யோவான் 19:30)

வெற்றியின் வார்த்தைகளைச் சொல்வதற்கான வேளை அமைந்தது. சிலுவையில் இயேசு மேற்கொண்ட யுத்தத்தின் விளைவின்மேல் சந்தேகம் உள்ள எவரும் யோவான் 19:30ஐக்

கவனிக்க வேண்டும்: “இயேசு காடியை வாங்கின பின்பு, முடிந்தது என்று சொல்லி ...”

‘‘முடிந்தது’’ என்ற இவ்வார்த்தை, மூலபாஷையாகிய கிரேக்கத்தில், “டெட்டலேஸ்டாயி” என்றுள்ளது. கிரேக்க மொழியில் இது, ‘‘அது முடிக்கப்பட்டது, என்றென்றும் இச்செயல் செய்யப்பட்டாயிற்று’’ என்று பொருள்படும். டெட்டலேஸ்டாயி என்ற இவ்வார்த்தை விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டது. அவர்கள் மந்தையில் எவ்விதப் பழுதுமின்றி ஒரு விலங்குக்குட்டி முழுமையாகப் பிறக்கும் போது, அவ்விவசாயி ‘‘டெட்டலேஸ்டாயி’’ ‘‘டெட்ட லேஸ்டாயி’’ என்று களிப்புடன் கூறுவார். இவ்வார்த்தை ஓவியக் கலைஞர்களால் மற்றும் சிற்பக் கலைஞர்களால் பயன்படுத்தப்பட்டது. ஒரு இயற்கைக் காட்சியை வரைந்து முடித்த பின்னர் அல்லது சலவைக்கல்லில் ஒரு சிற்பத்தைச் செதுக்கி முடித்த பின்னர், சில அடிகள் தூரம் பின்னால் சென்று தனது வேலைப்பாடைக் கவனித்துப் பார்ப்பார். திருத்தவோ, சேர்க்கவோ எதுவும் இல்லாதபட்சத்தில், அவர் விருப்புடன், “டெட்டலேஸ்டாயி! டெட்டலேஸ்டாயி!’’ என்று முணு முணுப்பார். இயேசுவால் இவ்வார்த்தை பயன்படுத்தப் பட்டது: “டெட்டலேஸ்டாயி!” அதாவது அவரது ஊழியம் முழுமையாய் நிறைவேறிற்று. சிலுவையினடியில் மனிதர்கள், “இயேசுவின் வாழ்வு தோல்வியாயிற்று” என்றனர்; ஆனால் இயேசு, “இது ஒரு வெற்றியாகும்” என்றார்.

‘‘முடிந்தது’’ என்று சொல்லும்போது இயேசு தனது இவ்வுலக வாழ்வின் முடிவைப்பற்றி மட்டும் குறிப்பிட வில்லை. அவர் நிறைவேற்ற வந்த காரியம் நிறைவேற்றப் பட்டது என்றும் கூறினார். அவர் நிறைவேற்ற வந்தவைகளில் ஒன்று பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையாகும் (மத். 5:17). அதை அவர் நிறைவேற்றினார்; புதிய உடன்படிக்கை அமுலுக்கு வரும்படி பழைய உடன்படிக்கையானது தள்ளப் பட்டது (எபிரெயர் 9:15-16; 10:9). பழைய உடன்படிக்கை முடித்து வைக்கப்பட்டது (கொலோ. 2:14); நியாயப் பிரமாணம் என்ற அளவில் பத்துக் கட்டளைகளின் பிரமாணம் முடித்து வைக்கப்பட்டது (2 கொரிந்தியர் 3:1-11); ஏழாம் நாள் -ஓய்வுநாள்-பிரமாணம் முடிந்துவிட்டது (கொலோ. 2:16).

இரட்சிப்பின் ஊழியமானது நிறைவேறியது என்பது மிகவும் முக்கியமானதாகும். ஏசாயா 53:6ல் உள்ள கடினமான பணி நிறைவேறியது. "நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழி தப்பித் திரிந்து அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்." 1 தீமோத்தேயு 2:6ன் கடினப்பணி நிறை வேறிற்று: "எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்தார்." வெளி. 5:9ன் கடினமான பணி நிறைவேறியது: "தேவரீர் ... அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும், பாஷைக் காரரிலும், ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக் கொண்டு ..."

இவ்விடத்தில் எச்சரிக்கை ஒன்று தேவைப்படுகிறது: இயேசு வின் பங்கு நிறைவேறிவிட்டது; மனிதரின் பங்கு இன்னும் நிறைவேறவேண்டியதாய் உள்ளது. "மேசியா" என்ற தனது பாடலை ஜார்ஜ் பிரெடெரிக் ஹேன்டில் எழுதிமுடித்தபோது, "முடிந்தது" என்று சொன்னார். இருப்பினும் பாடல் எழுதும் பணி மட்டுமே முடிந்திருந்தது. அப்பாடலுக்கு என்றும் நிலைக்கும்வண்ணம் அளிக்கப்படும் இசை, இனி அதற்குத் தரப்பட வேண்டியதாயிருந்தது. இயேசுவின் பங்கு நிறைவேறி யிருக்கலாம், ஆனால் நமக்கு, "... பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (பிலிப். 2:12; KJV) என்று கூறப்பட்டுள்ளது.

## ஒப்புக்கொடுத்தலின் வார்த்தைகள் "உம்முடைய கைகளில்" (லூக்கா 23:46)

துன்பம் எல்லாம் முடிவுக்கு வந்தாயிற்று; பேசுவதற்குச் சில வார்த்தைகளே எஞ்சியிருந்தன. இயேசு தமது ஜீவனை விடத் தயாரானார். இயேசு: "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார் (லூக்கா 23:46). அவர் இத்தனை சீக்கிரத்தில் மரித்துப் போனாரா என்று பிலாத்து பின்பு ஆச்சரியப்பட்டான் (மாற்கு 15:44).[20] முன்னதா கவே இயேசு "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து

கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன்" என்று கூறியிருந்தார் (யோவான் 10:17-18). இயேசுவிடம் மரணம் நெருங்கவில்லை, மாறாக இயேசுவே மரணத்தைச் சந்தித்தார்.

சாதாரணமாக மரணமடையுமுன் ஒருவர் தமது தலையைத் தூக்குவார் - இது நுரையீரல்களைப் பிராணவாயுவினால் நிரப்புவதற்கென்று இயற்கையில் நடக்கும் கடைசி முயற்சியாகும் - பின்பு அவரின் தலை கீழே சாயும். ஆனால் இயேசு, "தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்" (யோவான் 19:30ஆ) - இது இயேசுவே தாமாக முன்வந்து தமது ஜீவனை ஒப்புக்கொடுத்ததைத் தெளிவாக்குகின்றது. "அவர் தாமே விரும்பியவண்ணம் தமது ஜீவனைக் கொடுத்தார். ஏனென்றால், அவர் அதை விரும்பிச் செய்தார், அவர் தாம் விரும்பியபடியே செய்தார்" என்று அகஸ்தீன் என்பவர் கூறினார்.

இரட்சிப்பின் ஊழியத்தை இயேசு நிறைவேற்றிய பின்பு, "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று கூறினார் (லூக். 23:46). இயேசு தமது வாழ்வை தேவனுக்கு ஒப்புவிக்க முடிந்தது. அவ்வாறே நீங்களும் நானும் நமது ஆவியைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமானால், இவ்வாழ்க்கையையும் தேவனுக்கு ஒப்புவித்து வாழ வேண்டும்.

## முடிவுரை

சிலுவையில் இயேசு எவ்வளவு பெரிய பாடத்தைக் கற்பித்துள்ளார்! மன்னிப்பு, நம்பிக்கை, தனிமை, பாடுகள், சோர்வு, ஜெயம் மற்றும் ஒப்புக்கொடுத்தல் ஆகியவற்றிற்கான பாடங்கள்! இப்பாடங்கள் நமது வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டும் என்றால், இவைகளைக் கூறியவருடன் நாம் வலுவான உறவை வளர்த்துக்கொள்ள வேண்டும். "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்

*கொண்டீர்களே'' (கலாத். 3:26-27) என்று பவுல் குறிப்பிட்டுள்ளார்.*

*விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தினால் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்ட நாம், மரணம் ஏற்பட்டாலும், அவரைப் பின்பற்ற விரும்பவேண்டும். இயேசு, "ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்'' என்று கூறியுள்ளார் (லூக்கா 9:23). இதை நாம் செய்தால், எங்கும், எப்பொழுதும் அவரைப் பின்பற்ற ஆயத்தமாயிருப்போம்!*

## காட்சி-உதவிக் குறிப்புகள்

இப்பாடத்திற்கு நான் பிளானல் போர்டுக்காட்சி ஒன்றைத் தயார் செய்தேன். போர்டின் மேல்பகுதியில் பாடத் தலைப்பு இருக்கும். இயேசுவைக் குறிக்கும்வகையில் உள்ள உருவம் போர்டின் நடுவில் வைக்கப்பட்டு, அதன் மேல் (முன்புறம்) சிலுவை வடிவம் (இயேசுவுக்கு பிரசங்க மேடை போல் தோன்றும் வண்ணம்) வடிவமக்கப்பட்டிருந்தது. பிரசங்கம் செய்கின்றபோது முக்கிய கருத்துக்களை ஏழு அட்டைகளில் எழுதிவைத்து, பிரசங்கம் செய்யும் சமயத்தில் இம்மையப் பகுதியைச் சுற்றி அவைகளை ஒவ்வொன்றாக ஒட்ட வைத்தேன். ஒரு ஓவர்ஹெட் புரொஜக்டரை வைத்தும் இதே போல செய்யப்படலாம்.

---

குறிப்புகள்

*[1]இந்தப் பிரசங்கத்திற்கான கருத்து அநேக பிரசங்கியார்களால் பயன்படுத்தப் பட்டுள்ளது. இந்தப் பிரசங்கம் அநேக ஆண்டுகளுக்குமுன், பல்வேறுபட்ட மூலங்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்டதாகும். [2]தாவீதினுடையது நான்காவதாயிருக்கலாம் (2 சாமுவேல் 23:1ஐக் காண்க). [3]சாத்தானுடைய வார்த்தைகளால் இது இயேசுவுக்கு குறிப்பிட்டுக் காட்டப்பட்டது. [4]''உபரிவருமானம் இல்லையென்றால் ...'' என்று அமெரிக்கர்கள் சொல்லக்கூடும். [5]இரட்சிப்படைய ஞானஸ்நானம் அவசியமில்லை என்பவர்கள் தங்கள் நம்பிக்கையை ''நிரூபிக்க'' சிலுவையில் தொங்கிய கள்வனை அடிக்கடி உதாரணப்படுத்துகின்றனர். [6]சிலர், இக்கள்வனின் இரட்சிப்பு பற்றி ஐயப்படுகின்றனர். ஆனால், "பரதீசு" என்பது அடிப்படையில், "சந்தோஷம் தரும் தோட்டம்'' என்று பொருள்படும். இது ''ஆபிரகாமின் மடி'' (லூக்கா 16:23) என்பதற்கு இணையானதாகும். நியாயத் தீர்ப்புக்காக நீதிமான்கள் காத்து*

இருக்கின்ற பாதாள உலகத்தை இது குறிக்கிறது. இயேசு மரித்தபின் பாதாளத்திற்குச் சென்றதைப் பேதுரு தெளிவாய்க் கூறி விளக்கினார் (அப். 2:27, 31). ஆபிரகாமும், லாசருவும் இருந்த இடத்திற்கு இயேசு சென்றதில் ஐயமில்லை. மேலும் “அந்நாளிலேயே” அக்கள்ளனும் தம்மோடு பரதீசில் இருப்பான் என்று அவனுக்கு வாக்களித்தார். [7]“கள்ளன் இரட்சிக்கப்பட்டது” போல நாமும் இரட்சிக்கப்பட முடியும் என்பவர்கள் இரட்சிப்பின் நியதியான ஞானஸ்நானத்தை விலக்குகின்றனர். வேதம் முழுவதிலும், இக்கள்வனின் மாற்றம் மிக கடினமானதொன்று என்பதை அவர்கள் கவனிப்பதில்லை. அநேகர் தங்கள் விசுவாசத்தைக் கைவிட்ட சமயத்தில் அவன் விசுவாசத்திற்கு வந்தான். அநேக யூதர்கள் மேசியாவைக் குறித்து தாங்கள் கொண்டிருந்த கருத்துக்களினால் அடித்துப்போகப்படுகையில் இக்கள்வன் அந்தக் கருத்தை ஜெயங்கொண்டான். எல்லாக் குரல்களும் இயேசுவை கண்டனம் பண்ணுகையில் அவன் அவருக்காகக் குரல் கொடுத்தான். மேலும் அவன் சரீரம் மற்றும் இருதயத்தில் உணர்ந்த நம்ப இயலாத வலி, உபத்திரவம் இவற்றின் மத்தியில் இதைச் செய்தான். “அந்தக் கள்வன் இரட்சிக்கப்பட்டது” போல இன்று யாரேனும் தாம் இரட்சிக்கப்பட விரும்புவாரா என்பது சந்தேகமே! [8]மத்தேயு 20:1-16. [9]KJVயில் “Verily” என்றுள்ளது. [10]மத்தியிலிருந்த சிலுவை பரபாஸுக்கு உரியதாகும், எனவே இவ்விரு கள்ளர்களும் அவனைப் பின்பற்றியிருக்கலாம், ஒருவேளை அவனுடைய உதவியாட்களாயிருந்திருக்கலாம். பரபாஸைப்போன்று அவர்களும் கொலை மற்றும் கலகம் ஆகிய குற்றங்களைச் செய்திருக்கலாம் (யோவான் 18:40; லூக்கா 23:19).

[11]யோவான் 7:5 இயேசுவின் மரணம் வரைக்கும் அவருடைய சகோதரர்கள் அவிசுவாசிகளாயிருந்தபோதிலும், இயேசுவின் உயிர்தெழுதலுக்குப் பின்பு அவர்களில் சிலரோ அல்லது எல்லாருமோ கிறிஸ்தவர்களாயினர் (அப். 1:14). [12]சட்டரீதியாக இயேசுவின் தகப்பன் என்னப்பட்ட யோசேப்பு மரித்திருந்தார் என்று இவ்வசனம் நமக்குக் காட்டுகின்றது. இயேசுவின் நேரடி ஊழியகாலத்தில் எவ்விடத்திலும் யோசேப்பு குறிப்பிடப்படவில்லையாதலால், யோசேப்பு, இயேசுவுக்கு 30 வயதாகும்முன்னே மரித்திருப்பார். [13]“ஸ்திரீ” என்ற வார்த்தை இந்நாட்களில் சில சமூகங்களில் சிறுமைப்படுத்தும் சொல்லாயிருக்கிறது. [14]இது பெரும்பாலும் “உடனே” என்று குறிப்பிடப்படுகிறது. பெர்க்ளே மொழிபெயர்ப் பில் இது “அந்த நேரம் முதல்” என்றுள்ளது. [15]சிலுவையினருகிலிருப்பது மரியாளுக்கு மிகுந்த கடினமானதாயிருந்திருக்கும். அதைவிட்டு அகன்று செல்வது அதை விட மிகக்கடினமாயிருந்திருக்கும். இருப்பினும் முடிவாக மரியாளுக்குப் பிரயோஜன முண்டாயிற்று. அவள் இயேசுவுடன் கொண்டிருந்த இயற்கையான ஐக்கியத் திலிருந்து, கிறிஸ்துவுடன் உள்ள ஆவிக்குரிய ஐக்கியத்திற்கு உயர்த்தப்பட்டாள். இயேசுவை மகனாய் கொண்டிருப்பதைப் பார்க்கிலும் அவரைத் தமது இரட்ச கராகக் கொண்டது அதிக மேன்மையானது என்று அவள் கண்டாள். [16]வசனம் 1. [17]KJVயில் மொழிநடை. [18]மத்தேயு 4:2 மற்றும் யோவான் 4லும் காண்க. [19]இயேசு நமக்காக சிலுவையில் ‘‘நரகத்தின் தண்டனையை’’ அனுபவித்தார் என்று சொல்லுவதில் எவ்வித அவமதிப்பும் இல்லை (2 தெச. 1:7-9). [20]சிலுவையில் அறைதல் என்பது முக்கியமான உடலுறுப்புகளை நேரடியாகப் பாதிப்பதில்லை, எனவே சிலுவையிலறையப்பட்ட குற்றவாளிகள் மரணம் அடைய சில நாட்கள் ஆவதுண்டு. இரண்டு கள்வர்களின் மரணத்தைத் துரிதப்படுத்து வதற்காகப் படை வீரர்கள் அவர்களின் கால்களை முறித்தனர் (யோவான் 19:31ff). இதன்மூலம் அவர்கள் தங்கள் சரீரங்களை உயர்த்தி ஆழமாக மூச்சு வாங்குவதைத் தடைசெய்து, மூச்சடைப்பு ஏற்படும்படி செய்தனர்.